International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385(Print)
Volume 13, Issue 3, July – September 2026 ISSN 2394-6393(Online)

# அரசுப் பணியை பெற்று தரும் ஜாதக அமைப்புகள் – சனியின் நிலை

மு. கலைவாணி[#1], முனைவர் G. சுப்ரமணியம்[*2]

[1]ஆய்வாளர், [2]உதவிப்பேராசிரியர்

[1,2]ஜோதிடவியல்துறை, VISTAS பல்லாவரம், சென்னை -600 117

**ஆய்வுச் சுருக்கம்:** அரசு பணியில் நலன்கள் அதிகம் கிடைக்கும் என்பது பொதுவான எண்ணமாகும். கையில்_வேலை இருந்தால் வாயில் உணவு இருக்கும் என்ற பழமொழி போல, அரசு உத்தியோகம் வாழ்வாதாரத்தை உறுதியாக்கும் ஒரு வழியாக பார்க்கப்படுகிறது. ஓய்வூதியம், மருத்துவ சலுகைகள் போன்றவை இதற்குக் காரணமாகும்.

***திறவுக்கோல் –*** *சூரி; ஜாதகர்; அதிபதி; தனம்; நட்சத்திரம்.*

## 1. முன்னுரை

அரசுப் பணியை பெற்றுத் தருவதில் கோள்களின் ஜோதிட ரீதியாக எவ்வாறு பலன்களை ஏற்படுத்துகிறது என்பதை பற்றி கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது.

அரசு வேலை என்பது ஓர் அதிகாரம் மிக்க அரசுக்கு, அடிமை தொழில் என்றே சொல்ல வேண்டும். சனி ஆதிக்கம் கொண்டவர்கள் கடின உழைப்பாளிகளாக இருப்பார்கள். எனவே, சனிபகவான் ஒரு ஜாதகத்தில் ஆட்சி பெற்றோ, உச்சம் பெற்றோ இருப்பாரேயானால், அவர் ஒரு ரெவல்யூசனர் லீடராய் இருக்கக்கூடிய அமைப்பு இருக்கும். அரசியல் சம்பந்தமாக ஒரு ஏற்றம், அவர் பின்னாடி மக்கள் வந்து செல்லக்கூடிய வாய்ப்பு மிகவும் அதிகமாகும். இதனால் தனித்துவமான ஒரு ரெவல்யூசனர் லீடராக இருக்கக்கூடிய வாய்ப்பு என்பது சனிபகவான் ஆட்சி, உச்ச வீட்டில் இருப்பதால் வரும்.

6 ஆம் வீடு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான சாதகமான குறிகாட்டியாக செயல்படுகிறது.

ஜாதகரின் அந்தஸ்திற்கு சமமில்லாத வேலைக்காரர்கள், அடிமைகள் ஜாதகருக்கு கட்டுப்படும் நபர்கள் அல்லது ஜாதகர் வெற்றி கொள்ளும் நபர்கள் ஆகியவற்றை ஆறாம் பாவகம் கூறும்.

ஆறாம் பாவகம் மற்றவரிடம் பணிபுரிதல், மாத சம்பளம் எதையும் மற்றவர்களை விட சிறப்பாக செய்தல், தற்காலிக பண வரவு போன்ற காரகங்களை கூறுகிறது.

## 2. அரசுப் பணியை பெற்றுத் தருவதில் சனி பகவான் முக்கியத்துவம்

### 2.1 கோள்களின் காரகத்துவம்

#### 2.1.1 சனி பகவான்

- ஆயுள் காரகன்
- கர்ம காரகன். கடந்த பிறவியின் கர்ம பலன். நியாயமான தண்டனை அல்லது பரிசு. நீதிபதி போல் செயல்படுவார்.
- ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட. பொறுப்புணர்வு, அரசு சட்டம் ஒழுங்கு
- பொறுமை. மெதுவாக செயல்படுவார். ஆனால், மிகவும் உறுதியான பலன் தருவார்.
- கடின உழைப்பு. மெதுவான முன்னேற்றம் உழைத்தால் மட்டுமே பலன் தருவார்.
- தாமதம். தடைகள், சோதனைகள் வாழ்க்கையில் கஷ்ட அனுபவங்கள். ஆனால், இது பாடம் கற்பிக்கத்தான்.
- நீண்ட கால நிலைத்தன்மை



DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133027

- பிற பெயர்கள் – மந்தன், சனிச்சரன், அயனேஷன், நீலன், சாயாபுத்ரன், குரூரன் மற்றும் சௌரி.
- சனி பகவான் ஒரு ராசியை கடக்க இரண்டரை ஆண்டுகள் ஆகிறது.
- ராசி மண்டலத்தில் சுற்றி வர 30 வருடங்கள் ஆகிறது.

### 2.1.2 ஆறாம் பாவகம்

- ஜோதிடத்தில் ஆறாம் பாவகம் மிகவும் முக்கியமானது. சவால் + வெற்றி இரண்டையும் ஒரே நேரத்தில் காட்டும் பாவகமாகும். பொதுவாக இதனை சத்ரு ஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது.
- நோய் / எதிரிகள் / கடன் / போட்டி / சேவை / வேலை.
- எதிரிகள் மற்றும் போட்டி தேர்வு / வெளிப்படையான எதிரிகள் / மறைமுக எதிரிகள். போட்டி தேர்வுகள் / ஆறாம் பாவம் பலமாக இருந்தால் எதிரிகளை வெல்வார்.
- சேவை மற்றும் வேலை / அரசு / தனியார் வேலை. குறிப்பாக சேவை மனப்பான்மை கொண்ட வேலைகள்.
- சட்டம் மற்றும் வழக்குகள் / வெற்றி தோல்வி இதன் மூலம் பார்க்கலாம். வளர்ச்சி தரும் பாவகங்களில் ஒன்று (உபஜெயஸ்தானம்). ஆரம்பத்தில் கஷ்டம் பின்னர் வளர்ச்சி.
- முடிவில் ஆறாம் பாவம் என்பது சவால் தரும் பாவகம். ஆனால் வெற்றியை உருவாக்கி தரும் பாவகம்.

## 3. அரசுப் பணியை பெறுவதற்கான கிரக அமைப்புகள்

அரசுப்பணியை பெறுவதில் சூரியன், சனி மற்றும் 6-ஆம் பாவகம் முக்கிய பங்கும் பெறுகிறது

### 3.1 விதிகள்

- சூரியன் / சனி தொடர்பு
- சூரியன் / செவ்வாய் தொடர்பு
- சனி / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு
- சனி / 6-ஆம் அதிபதியுடன் தொடர்பு
- சனி / 2-ஆம் அதிபதியுடன் தொடர்பு

### 3.1.1 உதாரண ஜாதகம் – 1

ஆண் ஜாதகம் –
பிறந்த தேதி –04.06.2002 செவ்வாய்
நேரம் – 10.30 பிற்பகல்
பிறந்த இடம் – மதுரை
ஜெ/லக்னம் - மகரம்
ஜெ/ராசி - மீனம்
ஜெ/நட்சத்திரம் – உத்திராட்டதி
லக்ன புள்ளி – திருவோணம் - 2

அட்டவணை 1. ஜாதகரின் இராசி மற்றும் நவாம்ச சக்கரங்களில் கிரக நிலைகள் - உதாரண சாதகம் – 1

| | | | |
|---|---|---|---|
| சந் | | சூரி புத சனி ரா | செ குரு சுக் |
| | இராசி | | |
| ல | | | |
| | கே | | |
| புத | | ல<br>குரு சுக் | |
| கே | அம்சம் | | சூரி |
| செ | | | சனி ரா |
| | | | சந் |

ஜாதகருக்கு அன்றைய வயது
As on - 2025 – 05 – 06
DOB - 2002 – 06 – 04
22 – 11 - 02

### 3.1.2 தசா புக்தி

புதன் தசை – 01.11.2013 – 01.11.2030 – 17 வருடங்கள்
புதன் தசை – ராகு புக்தி 30.04.2023 – 16.11.2025 – 2 வருடங்கள் 6 மாதங்கள் 16 நாட்கள்


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133027

### 3.1.3 விதிகளின் படி

- சூரியன் / சனி தொடர்பு – முதல் விதி பொருந்துகிறது.
- சூரியன் / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு (10-ஆம் அதிபதியான சுக்ரன் வீட்டில் சூரியன்) –மூன்றாம் விதி பொருந்தும்.
- சூரியன்/6-ஆம் அதிபதியுடன் தொடர்பு – (சூரியன்+புதன் சேர்க்கை) நான்காம் விதி பொருந்தும்.
- சூரியன் /2-ஆம் அதிபதியுடன் தொடர்பு (2-ஆம் அதிபதி சனியுடன் சேர்க்கை) –மூன்றாம் விதி பொருந்தும்.

### 3.1.4 உதாரண ஜாதகம் - 2

ஆண் ஜாதகம் –
பிறந்த தேதி –02.05.1998 வெள்ளி
நேரம் – 10.25 முற்பகல்
பிறந்த இடம் – திருச்சி
ஜெ/லக்னம் - மிதுனம்
ஜெ/ராசி - கடகம்
ஜெ/நட்சத்திரம் – பூசம்
லக்ன புள்ளி – புனர்பூசம் – 1

அட்டவணை 2. ஜாதகரின் இராசி மற்றும் நவாம்ச சக்கரங்களில் கிரக நிலைகள் - உதாரண சாதகம் – 2

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | சூரி செ சனி | | |
| குரு கே | இராசி | | சந் |
| | | | ரா |
| | | | |
| புத சனி | சூரி செ | | ல சந் |
| குரு சுக் கே | அம்சம் | | |
| | | | ரா |
| | | | |

ஜாதகருக்கு அன்றைய வயது

| | | |
|---|---|---|
| As on | - | 2022 – 03 – 14 |
| DOB | - | 1998 – 05 – 02 |
| | | 23 – 10 - 12 |

### 3.1.5 தசா புக்தி

புதன் தசை – 17.01.2017 – 17.01.2034 – 17 வருடங்கள். புதன் தசை – சந்திரன் புக்தி 17.02.2024 – 18.07.2025 – 01 வருடம் 05 மாதங்கள் 01 நாள்

### 3.1.6 விதிகளின் படி

- சூரியன் / சனி தொடர்பு – முதல் விதி பொருந்துகிறது.
- சூரியன் / செவ்வாய் தொடர்பு –இரண்டாம் விதி பொருந்தும்.
- சனி / செவ்வாய் தொடர்பு –இரண்டாம் விதி பொருந்தும்
- சனி / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு – புதன் வீட்டில் சூரியன் உள்ளதால் மூன்றாம் விதி பொருந்தும்.
- சூரியன் / 6-ஆம் அதிபதியுடன் தொடர்பு – 6-ஆம் அதிபதியின் நட்சத்திர சாரம் - நான்காம் விதி பொருந்தும்.
- சனி 2-ஆம் அதிபதியுடன் தொடர்பு (சந்திரன், சனி பகவானின் நட்சத்திர சாரம்) – ஐந்தாம் விதி பொருந்தும்.

## 4. முடிவுரை

ஜோதிடத்தில் சனி கர்மகாரகன், உழைப்பு, ஒழுக்கம், பொறுமை, கட்டுப்பாடு, நீண்டகால முயற்சி, பொதுச் சேவை ஆகியவற்றின் காரக கிரகமாகக் கருதப்படுகிறார். போட்டித் தேர்வுகள் மூலம் அரசு பணியைப் பெறுவதற்கு தேவையான மனவலிமை, விடாமுயற்சி மற்றும் தொடர்ச்சியான உழைப்பை வழங்குவதில் சனியின் பங்கு மிகவும் முக்கியமானது.

- சனி – கர்மகாரகன்சனி ஒருவர் தன்னுடைய உழைப்பின் மூலம் உயர வேண்டும் என்பதைக் குறிக்கிறார். அரசு வேலை, குறிப்பாக போட்டித்


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133027

தேர்வுகள் மூலம் கிடைக்கும் பதவிகள் பெரும்பாலும் சனியின் கருணையால் கிடைப்பதாக பாரம்பரிய ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன.

- கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சி போட்டித் தேர்வில் வெற்றி பெற பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் தொடர்ந்து படிக்க வேண்டியிருக்கும். இந்த பொறுமை, ஒழுக்கம் மற்றும் தன்னம்பிக்கையை சனி வழங்குகிறார். வலிமையான சனி உள்ளவர்கள் தோல்வியால் துவண்டு விடாமல் மீண்டும் முயற்சி செய்வார்கள்.
- 3. அரசு நிர்வாக அமைப்புகள் அரசுத் துறைகள், நிர்வாகம், சட்டம், ஒழுங்கு, பொதுச் சேவை போன்ற துறைகளுடன் சனிக்கு இயல்பான தொடர்பு உள்ளது.
- 6-ஆம் பாவத் தொடர்பு 6-ஆம் பாவம் போட்டி, எதிரிகளை வெல்வது, சேவை, வேலை ஆகியவற்றைக் குறிக்கிறது. சனி 6-ஆம் பாவத்தில் இருப்பது அல்லது அதன் அதிபதியுடன் நல்ல தொடர்பு பெறுவது, போட்டித் தேர்வுகளில் தொடர்ந்து முயன்று வெற்றி பெறும் ஆற்றலை வழங்கலாம்.
- 10-ஆம் பாவத் தொடர்பு10-ஆம் பாவம் தொழில், பதவி, கௌரவம், அதிகாரம் ஆகியவற்றைக் குறிக்கிறது. சனி 10-ஆம் பாவத்துடன் அல்லது அதன் அதிபதியுடன் தொடர்பு கொண்டால் நிலையான அரசு வேலை மற்றும் பதவியை அளிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும்.
- சனியின் தசா–புத்தி சனி மகாதசை அல்லது புத்தி காலங்களில், சனி தொழில் சம்பந்தமான பாவங்களுடன். (6, 10) தொடர்பு பெற்றிருந்தால் போட்டித் தேர்வில் வெற்றி பெற்று அரசு பணியில் சேரும் வாய்ப்புகள் உருவாகலாம். அதேபோல் கோச்சார சனி இந்த பாவங்களுக்கு சாதகமாக இருந்தாலும் பலன் வெளிப்படலாம்.

## பார்வை நூல்கள்

[1] குடும்ப ஜோதிடம், பொத்தேரி ஸ்ரீ ராமய்யங்கார் மற்றும் கீழத்தூர் ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ சாரியார், திரவள்ளுவர் கௌசிகன் ஸ்வாமி ஜோதிடர் - ஸ்ரீ ந்ருஸிம்ஹப்பிரியர், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை - 600 017, 10/03/1978.

[2] காரகத்துவம், டாக்டர் நெல்லை க.வசந்தன், Astro NKV Academy Human Life Research Centre, 20/2, 8A,Brindavan Street Extn, West Mambalam, Chennai – 600 033, அக்கடாபர் 2024

[3] ஜோதிட ஆராய்ச்சித் திரட்டு (மூன்றாம் பகுதி), மு.மாதேஸ்வரன், விஜயா பதிப்பகம் 20, ராஜா வீதி, கோயமுத்தூர் - 641 001, 15-ம் பதிப்பு, 2022.

[4] பாவகப்பலன், கீழவளவு K.சுப்ரமணியம், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம் தம்மம்பட்டி, கசலம் மாவட்டம், முதல் பதிப்பு, 01/07/2011.

[5] பத்தாம் பாவமும் உத்தியோக யோகமும், நந்தா துரைசாமி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம் நெ.1, ஏரப்ப கவுண்டர் சந்து தம்மம்பட்டி (அஞ்சல்), சேலம் மாவட்டம், டிசம்பர் 2020.

[6] மகாகவி காளிதாசரின் உத்தர காலாமிர்தம் ஜோதிட இந்து சாஸ்திர நூல், எட்டயபுரம் க.கோபிகிருஷ்ணன், குமரன் பதிப்பகம் 3, முத்து கிருஷ்ணன் தெரு பாண்டி பஜார், சென்னை-17, நவம்பர் 2000.

[7] திசா புக்தி பலன்கள், ஷண்முகானந்தா, பிரேமா பிரசுரம் 59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024, 13வது பதிப்பு, 2006.



DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133027